**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.461/2021
Sessions)

( Prosecution P.W.7
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | மலையரசி | -- | |
| Father's Name | மலையாண்டி | Calling | காவல் ஆய்வாளர் |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 01st day of August 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.01.2021 ம் தேதி திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது அப்போது உதவி ஆய்வாளராக பணிபுரிந்த பாபு என்பவர் 21.01.2021 ம் தேதி காலை 08.15 மணிக்கு அவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது நிலையத்தில் ஆஜராகி முருகன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண். 29/2021 பிரிவுகள் 279, 304 இதச வழக்க பதிவு செய்துள்ளார். அவர் வழக்கு பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை அதசாஆ 5 ஆகும். மேற்படி புகார் வாக்குமூலத்தின் அசல்மற்றும் முதல்த தகவல் அறிக்கையின் அசல் ஆகியவற்றை திருவில்லிபுத்தூர் நீதித்துறை நடுவர் எண்.2 க்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். நான் வேறு அலுவல பணியாக வெளியில் இருந்ததால் எனது உத்தரவுப்படி பாபு அவர்கள் அவருடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று காலை 09.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரியப்பன், வசந்தகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடம் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அதசாஆ 6 தயார் செய்துள்ளார். பின்பு சம்பவ இடத்தில் கிடந்த ஒரு நான்கு சக்கர வாகனத்தின் இடது பக்க முன் வீலின் கருப்பு கலர் ஆர்ச் போன்ற பாகத்தினை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். மேற்படி அத்தாட்சி ஏற்கனவே அதசாஆ 3 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இறந்துபோன வீரபொம்மு என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பகல் 11.55 மணி முதல் பகல் 12.55 மணி வரை பிரேத

விசாரணைஅறிக்கை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ 7 தயார் செய்துள்ளார். பின்னர் பிரேதத்தின் இறப்பின் உண்மையான காரணம் அறியும்பொருட்டு காவலர் கருப்பசாமி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அரசு மருத்துவருக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகள் முருகன், வினோத், சதீஷ்குமார், முனியராஜ், மாரியப்பன், வசந்தகுமார், கருப்பசாமி, சேதுராமு, லதா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் 22.01.2021ம்தேதி இவ்வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மேற்படி சாட்சிகள் 1 முதல் 9 வரையிலான சாட்சிகளை விசாரித்தபோது முன்பு கூறியதுபோலவே என்னிடமும் தெரிவித்ததால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேலும் சம்பவ இடம் சம்பந்தமாக பார்வை மகஜர்மற்றும் வரைபடம் அவர் தயார் செய்தது போலவே ஒத்து இருந்தததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. பின்பு விபத்து ஏற்படுத்திய வாகனம் மற்றும் எதிரியை தேடி சென்றபோது எதிரி அபி இண்டஸ்ட்ரீஸ் என்ற மில்லில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது சாட்சிகள் பரமசிவம், முத்தையா ஆகியோர் முன்னிலையில் எதிரி செல்லத்துரையை 22.01.2021ம் தேதி 16.15 மணிக்கு கைது செய்து விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் விபதது ஏற்படுத்திய வாகனத்தை அடையாளம் காட்டுவதாக கூறியதன் அடிப்படையில் எதிரி மற்றும் சாட்சிகளுடன் வன்னியம்பட்டி விலக்கில் அமைந்துள்ள கோவிந்தன் என்பவரது ஒர்க் ஷாப்பில் அவர் அடையாளம் காட்டிய TN 84 B 4131 என்ற பதிவெண் கொண்ட போர்ஸ் நான்கு சக்கர வாகனத்தை பார்வையிட்டபோது ஏற்கனவே சம்பவ இடத்தில் கைப்பற்றிய மேற்படி வாகனத்தின் இடது பக்க வீலின் ஆர்ச் மற்றும் இடது பக்க பேனட் ஆகியவை நான் பார்வையிட்ட மேற்படி வாகனத்தில் இல்லாமல் இருந்தது உறுதியாகிவிட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் **அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ 8** ஆகும். பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து தக்க நிலைய பதிவேடுகளில் பதிவு செய்த பின்னர் எதிரியை தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்தேன். சாட்சிகள் முருகன், சதீஷ்குமார், முனியராஜ், சேதுராமு, லதா, கோவிந்தன் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சார்பு ஆய்வாளர் பாபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சார்பு ஆய்வாளர் பாபு அவர்கள் இவ்வழக்கில் கைப்பற்றியிருந்த மேற்படி வாகனத்தின் இடது பக்க முன் வீலின் ப–வடிவிலுள்ள கருப்பு கலர் ஆர்ச் படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். மேலும் பிரேத பரிசோதனை மேற்கொண்ட அரசு மருத்துவர் சுரேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய **பிரேத பரிசோதனை சான்று அதசாஆ 10** ஆகும். இவ்வழக்கின் விபத்தை ஏற்படுத்திய வாகனம் TN 84 B 4131 என்ற பதிவெண் கொண்ட போர்ஸ் நான்கு சக்கர வாகனத்தினை ஆய்விற்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வறிக்கை பெற்று ஆய்வாளர் ஜாஸ்மீன் மெர்சி கமலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அதசாஆ 11** ஆகும்.

அதன் பின்பு விடுப்பு முடிந்து ஆய்வாளராக பொறுப்பு ஏற்றுக்கொண்ட திரு. பாஸ்கர் ஆய்வாளர் வசம் இவ்வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கில் புலன் விசாரணைசெய்வதற்கு சார்பு ஆய்வாளர் திரு.பாபு என்பவருக்கு எழுத்து பூர்வமான அங்கீகாரம் எதுவும் கொடுக்கவில்லை. இவ்வழக்கானது ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்படதக்க வழக்காகும். முதல்தகவல் அறிக்கை 21ம் தேதி பதிவு செய்யப்பட்டு 22ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. வழக்கின் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியவை 31.08.2021 தேதியில்தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. மேற்படி 8 மாத காலதாமதத்திற்கு காரணம் எதுவும் கூறவில்லை. 21.01.2021ம் தேதி தயாரிக்கப்பட்ட அத்தாட்சி 26.01.2021ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. வாகனத்தின் இடது பக்க முன் வீலின் ப–வடிவிலுள்ள கருப்பு கலர் ஆர்ச் முன்பக்கத்திலிருந்து விழுந்ததாக காட்டப்பட்டுள்ளது. எதன் அடிப்படையில் அவ்வாறு இடது பக்கம் என்று குறிப்பிடப்பட்டது என்றால் வாகனத்தை பார்த்தால்தான் சொல்லமுடியும். நான் வாகனத்தை 22.01.2021 தேதியில்தான் கைப்பற்றினேன். அதற்கு முன்பே பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டுவிட்டது. பார்வை மகஜர், வரைபடம், அத்தாட்சி ஆகியவை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அசா3– துரைராஜ், அசா4 – சதீஷ்குமார் ஆகியோர் இனம் தெரியாத வாகனம் என்றுதான் சொல்லியுள்ளார்கள். புகாருக்கு முன்பு எங்கள் நிலைய காவலரோ அல்லது ரோந்து காவலர்களோ சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் இல்லை. புகார்தாரர்தான் பிரேதத்தை சம்பவ இடத்திலிருந்து தூக்கி வந்து மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் புகைப்படம் தாக்கல் செய்யப்படவில்லை. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் அசா1க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 01st day of August 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**